# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102074

1. District மாவட்டம் : வேலூர் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 04/2018 Date: நாள் 24/02/2018

2. (i) Act சட்டம்: கண்காணிப்பு பிரிவு Sections பிரிவுகள்: 7 of PC Act
   (ii) Act சட்டம்: PC Act 1988 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 14/2/18 Date to : நாள் வரை 23/2/18
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23/2/18 Time : நேரம் 11.45 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol I Time : நேரம் 23.2.18 @ 11.45 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக - எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் நாட்றம்பள்ளி சுமார் 90 km மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் - (b) Address : முகவரி வட்டார ஊராட்சி அலுவலகம், நாட்றம்பள்ளி, வேலூர் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : - இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி. ஜோதிகா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அறிவழகன்
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 1984 (d) Nationality : நாட்டினம் - (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
   (f) Occupation : தொழில் இல்லை (g) Address : முகவரி எண் 46/40 காமராஜர் தெரு, கே. பந்தாரப்பள்ளி, அரிய பெருமனூர் அஞ்சல், நாட்றம்பள்ளி வட்டம், வேலூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. ரமா, ஊர்நல அலுவலர், (மகளிர் சேவகி) வட்டார ஊராட்சி அலுவலகம், நாட்றம்பள்ளி, வேலூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   திருமண வேலை இருந்ததால் தகவல் தருவதில் தாமதம்

GCP 240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. **Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)**

- NIL -

10. **Total value of properties stolen / involved :** —
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு**

11. **Inquest Report / Un-natural death Case No. if any:** —
**பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்**

12. **FIR Contents (Attach separate sheet, if required) :**
**முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)**

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. **Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................................on point of jurisdiction.**

**எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.**

**FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.**
**மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.**

K. R. [signature]

14. **Signature / Thumb Impression of the Complainant / Informant**
**குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /**
**பெருவிரல் இரேகைப் பதிவு** 27.02.2018

S. Vijayalakshmi [signature]
**Signature of the Officer in-charge, Police Station**
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்**

15. **Date & Time of despatch to the court:**
**நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்**

27/2/18 @ 0730hrs.

**Name: பெயர்** S. VIJAYALAKSHMI
**Rank: நிலை** காவல் **No:** ஆய்வாளர்
[illegible]
சென்னை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

பணிந்து அனுப்பப்படுகிறது: வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் 23.02.2018-ம் தேதி காலை 11.45 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, புகார்தாரர் திருமதி. K. இராதிகா க/பெ அறிவழகன், எண்.46/40, காமராஜர் தெரு, B.பந்தாரப்பள்ளி, அதிப்பெரமனூர் அஞ்சல், நாட்றம்பள்ளி வட்டம், வேலூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவை பார்க்க, அதில் அவர் தன்னுடைய தங்கையின் பெயர் கனிமொழி, வயது-24 எனவும் அவர் 12ம் வகுப்பு முடித்து, பின்பு வாணியம்பாடி ஜெயின் கல்லூரியில் B.A. (English) படித்து அதில் அரியர்ஸ் இருந்ததால், வேலைக்கு அனுப்பவில்லை என்றும், தன் தங்கை கனிமொழிக்கு, திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் குப்பநத்தத்தை சேர்ந்த கவியரசன் த/பெ கார்த்திகேயன் என்பவருடன் 19.02.2018-ம் தேதியன்று திருமணம் நிச்சயிக்கப்பட்டது என்றும், அதனால், தமிழக அரசால் வழங்கப்படும் திருமண உதவி திட்டத்தொகை பெறுவதற்காக, தானும் அவருடைய தங்கை கனிமொழியும் கடந்த 09.02.2018-ந்தேதி நாட்றம்பள்ளி B.D.O. ஆபீசிற்கு சென்று, அங்கு முக்கிய சேவகி ரபியா என்பவரை பார்த்தபோது அவர் ஜாதிச்சான்றிதழ், வருமானச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ், திருமணப்பத்திரிகை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகத்தின் முன் பக்கம், பள்ளிப்படிப்பு சான்றிதழ், மணமகன், மணமகள் மற்றும் மணமகளின் தாயார் ஆகியோர்களின் போட்டோக்கள் மற்றும் ஆதார் கார்டு ஆகியவற்றின் நகல்கள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு வரும்படி சொல்லி, வருவதற்கு முன்பு அவருடைய செல்போன் நெம்பரான 99942 98105 என்ற எண்ணிற்கு தொடர்புகொண்டு சொல்லிவிட்டு வரும்படி சொன்னதாகவும், அதன்படி 12.02.2018-ந் தேதி சான்றிதழ்களின் நகல்களையும் எடுத்துக்கொண்டு நாட்றம்பள்ளி B.D.O. ஆபீசிற்கு போனதாகவும், அப்போது ரபியா, காலேஜ் படித்ததற்குண்டான புரவிஷனல் சர்டிபிகேட் எடுத்துக்கொண்டு வரும்படி சொன்னதாகவும், அரியர்ஸ் இருந்ததால் புரவிஷனல் சர்டிபிகேட் கிடைக்காது என்று ஜெயின் காலேஜில் கூறியதால் மீண்டும் அன்றைய தினமே முக்கிய சேவகி ரபியா அவர்களை பார்த்து சொன்னதாகவும், அதற்கு அவர் மூவலூர் இராமாமிர்த அம்மையார் திருமண உதவித்தொகை ரூ.50,000/- மற்றும் எட்டு கிராம் தங்கம் வாங்க டிகிரி சர்டிபிகேட் வேண்டும் என்றும், அது இல்லாததால் +2 படித்த சர்டிபிகேட் வைத்து, ரூ.25,000/- உதவித்தொகையும், எட்டு கிராம் தங்கமும் வாங்கலாம் என்றும், பக்கத்தில் உள்ள தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கியில் உள்ள இ.சேவை மையத்தில் ஆன்லைனில் விண்ணப்பிக்குமாறும் சொல்லி தங்களை அனுப்பி வைத்ததாகவும், கடந்த 14.02.2018-ம்தேதி தாங்களும் ரூ.120/- கொடுத்து, ஆன் லைனில் விண்ணப்பித்து, அந்த ஒப்புகை சீட்டை எடுத்துக்கொண்டு B.D.O. ஆபிசிற்கு சென்றபோது அங்கு முக்கிய சேவகி ரபியா இல்லாததால், அவரை போனில் தொடர்புகொண்டு தாங்கள் B.D.O. ஆபிசிற்கு வந்திருக்கும் தகவலை சொன்னதாகவும், அதற்கு அவர் ஒப்புகை சீட்டு, அனைத்து சான்றிதழ்களின் நகல்கள் மற்றும் ரூ.3,000/- ஆகியவற்றை தயாராக வைத்திருக்குமாறு சொல்ல, நான் ரூ.3,000/- எதற்கு மேடம் என்று கேட்டதற்கு அதற்கு அவர் அலுவலக செலவிற்காகவும், என்னுடைய வீட்டிற்கு நேரில் வந்து ஆய்வு செய்வதற்காக ஆகும் ஆட்டோ செலவிற்காகவும் என்று சொன்னதாகவும்,

அதற்கு தன்னிடம் பணம் இல்லையென்று சொன்னதற்கு, அவர் நீ பணத்தை எப்படியாவது ரெடி பண்ணிட்டு சொல்லு நான் வந்து பார்க்கிறேன் என்று சொன்னார் என்றும், பின்னர் கடந்த 16.02.2018-ம்தேதி தன்னுடைய பெரியப்பா மகள் ரீத்தா என்பவரிடம் முக்கிய சேவகி ரபியா தன்னிடம் ரூ.3,000/- பணம் லஞ்சமாக கேட்ட தகவலை சொல்ல, அதற்கு அவர், முக்கிய சேவகி ரபியாவின் செல்போனில் தொடர்பு கொண்டு பேசியபோது ரபியா, டிகிரி படித்திருந்தால் ரூ.3,000/- என்றும், +2 படித்திருந்தால் ரூ.2,000/- கொடுக்க வேண்டும் என்றும், எனக்கு நீங்கள் ரூ.2,000/- கொடுத்தால்தான் திருமண உதவித்தொகை கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்று அவரிடம் சொன்னதாகவும், தமிழக அரசால் வழங்கப்படும் திருமண உதவித்தொகை பெறுவதற்காக தனக்கு ரூ.2,000/-ஐ முக்கிய சேவகி ரபியாவிற்கு கொடுக்கவிருப்பமில்லை என்றும் திருமண உதவித்தொகை பெற்று தருவதற்காக தன்னிடம் ரூ.2,000/-ஐ லஞ்சமாக கேட்ட நாட்றம்பள்ளி முக்கிய சேவகி ரபியா மீது நடவடிக்கை எடுக்குமாறு தனது புகார் மனுவில் தெரிவித்திருந்தார். அதன்படி மேற்படி புகார் மனுவின் நகலை இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டதின்பேரில், சென்னை இயக்குநரக உத்தரவுப்படி PE 57/2018/SW/VL நாள்.26.02.2018-ந் தேதி 15.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டு, முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அந்த விசாரணையில் 26.2.2018-ந் தேதி மாலை திருமதி. ரபியா அவர்கள் மேற்கொண்ட கள ஆய்வின் போது புகார்தாரரிடம் நேரடியாக பணம் ரூ.2,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டது உறுதி செய்யப்பட்டது. மேலும் என்னுடைய தகவலாளர்களை தொடர்பு கொண்டும் நேரில் சந்தித்து எதிரியின் நடத்தை குறித்து விசாரணை செய்ததில் எதிரியானவர், அரசால் வழங்கப்படும் உதவி தொகைகளை பயனாளிகளுக்கு வழங்குவதற்கு பயனாளிகளிடமிருந்து லஞ்சமாக பணம் பெறுவது உறுதி செய்யப்பட்டது. எனவே, எதிரி திருமதி. ரபியா, முக்கிய சேவகி, நாட்றம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலகம், வேலூர் மாவட்டம் என்பவர் மீது 1988 வருட ஊழல் தடுப்பு சட்ட பிரிவு 7-ன் கீழ் வழக்கு பதிவுச் செய்ய முகாந்திரம் இருந்தமையால், சென்னை இயக்குநரக அனுமதிப் பெற்று, திருமதி. K. இராதிகா என்பவர் கொடுத்த புகார் மனுவின் பேரில், இன்று 27.02.2018-ம் தேதி காலை 12.00 மணிக்கு வேலூர் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு குற்ற எண்.04/2018 சட்ட பிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம், 1988-ன் கீழ் திருமதி. ரபியா, முக்கிய சேவகி, நாட்றம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலகம், வேலூர் மாவட்டம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர் திருமதி. K. இராதிகா க/பெ அறிவழகன், எண்.46/40, காமராஜர் தெரு, B.பந்தாரப்பள்ளி, அதிப்பெரமனூர் அஞ்சல், நாட்றம்பள்ளி வட்டம், வேலூர் மாவட்டம். என்பவர் கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் K. இராதிகா க/பெ அறிவழகன், எண்.46/40, காமராஜர் தெரு, B.பந்தாரப்பள்ளி, அதிப்பெரமனூர் அஞ்சல், நாட்றம்பள்ளி வட்டம், வேலூர் மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, பொருள்: திருமண உதவித்தொகைக்கு லஞ்சம் கேட்டவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோருவது – தொடர்பாக. நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய கணவர் கூலி வேலை செய்து வருகிறார். எனது அம்மா அப்பா பெயர் செந்தமிழ்செல்வி மற்றும் குபேந்திரன் ஆகும். என்னுடைய அப்பாவும் கூலி

வேலை செய்து வருகிறார். என்னுடைய வீடும், என்னுடைய அம்மாவின் வீடும் ஒரே தெருவில் உள்ளது. என்னுடன் பிறந்த தங்கை கனிமொழி, வயது-24. அவர் 12th நாட்றம்பள்ளி அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளியில் படித்தார். பின்பு வாணியம்பாடி ஜெயின் கல்லூரியில் B.A. (English) படித்தார். அரியர்ஸ் இருந்ததால், வேலைக்கு அனுப்பவில்லை. என் தங்கை கனிமொழிக்கு, திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் குப்பநத்தத்தை சேர்ந்த கவியரசன் த/பெ கார்த்திகேயன் என்பவருடன் 31.01.2018-ம்தேதியன்று செங்கம் குப்பநத்தத்தில் நிச்சயதார்த்தம் முடித்தோம். என்னுடைய தங்கை கனிமொழிக்கும், கவியரசனுக்கும் 19.02.2018-ம்தேதியன்று திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அதனால், தமிழக அரசால் வழங்கப்படும் திருமண உதவி திட்டத்தொகை பெறுவதற்காக, நானும் என்னுடைய தங்கை கனிமொழியும் கடந்த 09.02.2018-அன்று நாட்டறம்பள்ளி B.D.O. ஆபீசிற்கு சென்று, அங்கு முக்கிய சேவகி ரபியா என்பவரை பார்த்தோம். அப்போது அவர் ஜாதிச்சான்றிதழ், வருமானச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ், திருமணப்பத்திரிகை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகத்தின் முன் பக்கம், பள்ளிப்படிப்பு சான்றிதழ், மணமகன், மணமகள் மற்றும் மணமகளின் தாயார் ஆகியோர்களின் போட்டோக்கள் மற்றும் ஆதார் கார்டு ஆகியவற்றின் நகல்கள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு வரும்படி சொல்லி, வருவதற்கு முன்பு அவருடைய செல்போன் நெம்பரான 99942 98105 என்ற எண்ணிற்கு தொடர்புகொண்டு சொல்லிவிட்டு வரும்படி சொன்னார். 12.02.2018-அன்று மேற்சொன்ன அனைத்தின் நகல்களையும் எடுத்துக்கொண்டு நாட்றம்பள்ளி B.D.O. ஆபீசிற்கு போனோம். அப்போது ரபியா, காலேஜ் படித்ததற்குண்டான புரவிஷனல் சர்டிபிகேட் எடுத்துக்கொண்டு வரும்படி சொன்னார். எனவே மீண்டும் நாங்கள் ஜெயின் காலேஜ் வாணியம்பாடிக்கு சென்று புரவிஷனல் சர்டிபிகேட் கேட்டதற்கு, அரியர்ஸ் இருந்தால் புரவிஷனல் சர்டிபிகேட் கிடைக்காது என்று சொன்னார்கள். மீண்டும் அன்றைய தினமே நாங்கள் நாட்றம்பள்ளி B.D.O. ஆபீசிற்கு போய் முக்கிய சேவகி ரபியா அவர்களை பார்த்து நடந்தவற்றை சொன்னோம். அதற்கு அவர் மூவலூர் இராமாமிர்த அம்மையார் திருமண உதவித்தொகை ரூ.50,000/- மற்றும் 8 கிராம் தங்கம் வாங்க டிகிரி சர்டிபிகேட் வேண்டும் என்றும், அது இல்லாததால் +2 சர்டிபிகேட் வைத்து, ரூ.25,000/- உதவித்தொகையும், 8 கிராம் தங்கமும் வாங்கலாம் என்றும், பக்கத்தில் உள்ள தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கியில் உள்ள இ.சேவை மையத்தில் ஆன்லைனில் விண்ணப்பிக்குமாறும் சொல்லி எங்களை அனுப்பி வைத்தார். 14.02.2018-அன்று நாங்களும் ரூ.120/- கொடுத்து, ஆன் லைனில் விண்ணப்பித்தோம். அதில் விண்ணப்ப எண்.2018/0301/04/001513 என்று குறித்து எங்களுக்கு ஒப்புகை சீட்டு வந்தது. அந்த ஒப்புகை சீட்டை எடுத்துக்கொண்டு மீண்டும் B.D.O. ஆபிசிற்கு போனோம். அங்கு முக்கிய சேவகி ரபியா என்பவர் இல்லாததால், நான் என்னுடைய செல்போனில் (97904 46917) இருந்து தொடர்புகொண்டு முக்கிய சேவகி ரபியாவிடம் நாங்கள் B.D.O. ஆபிசிற்கு வந்திருக்கும் தகவலை சொன்னேன். அதற்கு அவர் ஒப்புகை சீட்டு, அனைத்து சான்றிதழ்களின் நகல்கள் மற்றும் ரூ.3,000/- ஆகியவற்றை தயாராக வைத்திருக்குமாறு சொல்ல, நான் ரூ.3,000/- எதற்கு மேடம் என்று கேட்டதற்கு அதற்கு அவர் அலுவலக செலவிற்காகவும்,

என்னுடைய வீட்டிற்கு நேரில் வந்து ஆய்வு செய்வதற்காக ஆகும் ஆட்டோ செல்விற்காகவும் என்று சொன்னார். அப்போது அவரிடம் என்னிடம் பணம் இல்லையென்று சொன்னதற்கு, அவர் நீ பணத்தை எப்படியாவது ரெடி பண்ணிட்டு சொல்லு நான் வந்து பார்க்கிறேன் என்று சொன்னார். பிறகு நாங்கள் B.D.O. ஆபிசில் இருந்து வீட்டிற்கு வந்துவிட்டோம். பின்னர் கடந்த 16.02.2018-ம்தேதி என்னுடைய பெரியப்பா மகள் ரீத்தா என்பவரிடம் முக்கிய சேவகி ரபியா என்னிடம் ரூ.3,000/- பணம் லஞ்சமாக கேட்ட தகவலை சொல்ல, அதற்கு அவர், அவருடைய செல்போன் நெம்பர் 80564 04519 என்ற எண்ணிலிருந்து முக்கிய சேவகி ரபியாவின் செல்போனில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது ரபியா, டிகிரி படித்திருந்தால் ரூ.3,000/- என்றும், +2 படித்திருந்தால் ரூ.2,000/- என்றும் லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்றும், எனக்கு நீங்கள் ரூ.2,000/- லஞ்சமாக கொடுத்தால்தான் திருமண உதவித்தொகை கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்று அவரிடம் சொன்னார். தமிழக அரசால் வழங்கப்படும் திருமண உதவித்தொகை பெறுவதற்காக ரூ.2,000/-ஐ முக்கிய சேவகி ரபியாவிற்கு கொடுக்கவிருப்பமில்லை. திருமண உதவித்தொகை பெற்று தருவதற்காக என்னிடம் ரூ.2,000/-ஐ லஞ்சமாக கேட்கும் நாட்டறம்பள்ளி முக்கிய சேவகி ரபியா மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (SD/XXX) K.Radhika 23.02.2018.

Sir,

i. Received the complaint on 23.02.2018 at 11.45 hrs., and the same was forwarded to the Directorate of Vigilance and Anti-Corruption, Chennai on 23.02.2018 at 12.00 hrs. Sd/-xxxxx S.Vijayalakshmi, 23.02.2018 Inspr./V&AC/VLR.

ii. On the order of DVAC, Chennai, A Preliminary Enquiry in PE 57/2018/SW/VL, dt.26.02.2018 was registered, on 26.02.2018 at 15.00 hrs. Sd/-xxxxx S.Vijayalakshmi, 26.02.2018 Inspr./V&AC/VLR.

iii. On the outcome of the preliminary enquiry and after obtaining concurrence from DVAC, Chennai a case in Vigilance and Anti-Corruption, Vellore Detachment Cr. No. 04/2018, u/s. 7 of P.C.Act-1988 was registered on 27.02.2018 at 07.00 hrs. Sd/-xxxxx S.Vijayalakshmi, 27.02.2018 Inspr./V&AC/VLR.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மற்றும் இசேவை மையத்தில் ஆன் லைனில் விண்ணப்பித்து பெறப்பட்ட ஒப்புகைச்சீட்டின் நகல் ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, வேலூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிக் கொள்ளப்பட்டது.

S. Vijayalakshmi 27/2/18

Inspector of Police

Vigilance & Anti-Corruption

Vellore - 1.